தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 460/SCIC/2024**

திரு. அ. முஸ்ஸமில் த/பெ.M.A.ஜலீல் - புகார்தாரர்
எண்.9, ஆண்டாள் நகர் மெயின் ரோடு
தர்மலிங்கம் சாலை, ஆண்டாள் நகர்
சேலவாயல், மாதவரம் அஞ்சல்
சென்னை-600 051. செல்.9444852706.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
உதவி வருவாய் அலுவலர்
மண்டலம்-6, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.158, ஸ்ட்ராஹன்ஸ் சாலை
ஓட்டேரி, சென்னை-600 012.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **17.11.2023** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 21.11.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.12.2023 |
| 4. | மனுதாரரின் புகார் மனு | .01.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 17/11/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / Additional Revenue Officer, பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டிடம், சென்னை-3 அவர்களுக்கு அனுப்பி, அதில் "பெரம்பூர் தாலுகா, செம்பியம் கிராமம், Block 18. திலலை நாயகம் பிள்ளை 6வது தெரு, நகர புல (T.S.No.s) எண்கள்64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75 மற்றும் அதற்குரிய உட்பிரிவுகள் அனைத்திலும் அடங்கிய பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள புதிய மற்றும் பழைய வீட்டு எண்களுடன்

தகவல்கள் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் ” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. அ.முஸ்ஸமில் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.V.முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர், மண்டலம்-6, ஓட்டேரி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 24/12/2025 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 17/11/2023 தேதியிட்ட மனுவினை, சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து 21/11/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மண்டலம்-6, ஓட்டேரி, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு வரப் பெற்றுள்ளது. ஆனால் அம்மனுவிற்கு 24/12/2025 தேதியிட்டு மிகுந்த காலதாமதத்துடன் பதில் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இனி வருங்காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி உரிய காலவரையறைக்குள் மனுதாரருக்கு தகவல் அளிக்க வேண்டும், தவறும் பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையம், பொதுத் தகவல் அலுவலர், மண்டலம்-6, ஓட்டேரி, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை எச்சரிக்கிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஓம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP 460/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி வருவாய் அலுவலர்
மண்டலம்-6, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.158, ஸ்ட்ராஹன்ஸ் சாலை
ஓட்டேரி, சென்னை-600 012.

**<u>புகார்தாரர்</u>**

திரு. அ. முஸ்ஸமில் த/பெ.M.A.ஜலீல்
எண்.9, ஆண்டாள் நகர் மெயின் ரோடு
தர்மலிங்கம் சாலை, ஆண்டாள் நகர்
சேலவாயல், மாதவரம் அஞ்சல்
சென்னை-600 051. செல்.9444852706.

RG/Sr.PC